இதுவரை ரூ.6 கோடியே 23 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந் தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 23 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 19–05–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | சரோஜா பீட்டர், வெங்கடேஸ்வரா நகர், செம்பியம், சென்னை–600011 | 25,000/– |
| 2. | என்.ஏ.இ. அஜீஸ்கான், ஜாம்பஜார், திருவல்லிக்கேணி, சென்னை–600005 | 25,000/– |
| 3. | ஜி. கண்ணன், விநாயகர் கோயில் தெரு, நந்தியம்பாக்கம், சென்னை–120 | 25,000/– |
| 4. | க.ராஜாராம், திரு.வி.க.தெரு, பெருங்களத்தூர், சென்னை – 600 063 | 25,000/– |
| 5. | என்.எஸ். இளங்கோவன், பூங்காவனத்தம்மன் கோவில் தெரு, திருப்பத்தூர் | 25,000/– |
| 6. | வேண்டாமிர்தம் காசி, சு.காட்டேரி, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் | 25,000/– |
| 7. | ப.ஈஸ்வரன், தேவாரம், உத்தமபாளையம் தாலுக்கா, தேனி மாவட்டம் | 25,000/– |
| 8. | ஏ.ஆறுமுகம், கணக்கன்பட்டி, பழனி ஒன்றியம், திண்டுக்கல் மாவட்டம் | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |



## தி.மு.க. இளைஞர் அணி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தஞ்சாவூர் வடக்கு, புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் தெற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 22.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் வடக்கு | ரயாஸ் கிராண்ட் ஹோட்டல், மகாமகம் குளம் எதிரில், கும்பகோணம். |
| 24.05.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு | கற்பகவிநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை. |
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 6 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 20.05.2025 செவ்வாய்க்கிகிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மகால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி. மகால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 15-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

மதுரை மாவட்டத்தின்

# பத்து தொகுதிகளின் வெற்றியை முதல்வரிடம் சமர்ப்பிப்போம்!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு - பி.மூர்த்தி சூளுரை!





மதுரை, மே.20-

மதுரை மாவட்டத்தில் 10 சட்டமன்ற தொகுதிகளிலும் வெற்றி பெற்று முதல்வரிடத்தில் வெற்றியை ஒப்படைப்போம் என அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி சூளுரைத்தனர்.

மதுரை மாவட்டத்தின் 10 சட்டமன்றத் தொகுதிகளுக்கான ஆலோசனைம் கூட்டம் மதுரையில் தனியார் ஹோட்டலில் நடைபெற்றது.

**அமைச்சர் மூர்த்தி பேச்சு!**

இக்கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையுரை ஆற்றினார், அப்போது பேசியதாவது:-

மதுரை மண்டலத்திற்கு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் தங்கம் தென்னரசுவை வரவேற்று அவரின் ஆலோசனையை ஏற்று மதுரை மாவட்டத்தின் 10 சட்டமன்ற தொகுதிகளையும்வென்றெடுக்க வேண்டும், இப்பொழுதிலிருந்து தேர்தல் பணிகளை தொடங்குவதோடு மட்டுமல்லாமல் தலைமையின் அறிவுரையை ஏற்று சிரத்தையோடு பணியாற்ற வேண்டும் என நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார். இந்த பணியை திறம்பட மேற்கொண்டு 10 சட்டமன்றத் தொகுதிகளின் வெற்றியை கழகத் தலைவர், முதல்வர் அவர்களிடம் சமர்ப்பிப்போம் எனவும் சூளுரைத்தார்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு பேச்சு!**

அதனைத் தொடர்ந்து சிறப்புரை ஆற்றிய மண்டல பொறுப்பாளரும் நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சருமான தங்கம் தென்னரசு பேசுகையில்

நம்முடைய ஒப்பற்ற முதல்வர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையின்படி மதுரை மாவட்டத்தில் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கக்கூடிய உங்களோடு பணியாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்று உங்களையெல்லாம் இன்றைக்கு சந்திப்பதிலேயே மிகுந்த மகிழ்ச்சி. இந்த நல் வாய்ப்பினை எனக்கு உருவாக்கித் தந்துள்ள முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சருக்கு எனது நன்றியை தெரிவிப்பதுடன், மிகக் குறுகிய காலகட்டத்தில் பல்வேறு பணிச்சுமைகளுக்கு இடையில் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்து நடத்தியுள்ள மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் மூர்த்திக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்பாண்டி மண்டலத்தில் அதிகமான சட்டமன்ற தொகுதிகளை பெற்றுள்ள ஒரு மாவட்டம் என்றால் அது மதுரை மாவட்டம், மதுரை என்பது தமிழ்நாட்டின் அரசியல் தட்பவெட்பங்களை காலம் காலமாக வழிகாட்டக்கூடிய திசை காட்டும் கருவியாகவே இருந்திருக்கிறது. 50 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் தமிழ்நாட்டில் அரசியல் தட்பவெப்ப நிலை அறிவிக்கக்கூடிய இடமாக மதுரை திகழ்ந்து வருகிறது. எனவே தான் மதுரைக்கு என்று முக்கியமான இடம் அரசியல் களத்தில் இருக்கிறது. அந்த மதுரையிலே 10 தொகுதிகள் நாம் இன்றைக்கு களம் காணக்கூடிய தொகுதிகளாக இருக்கிறது. இந்த பத்து தொகுதிகளிலே நாம் பெறக்கூடிய வெற்றி தான் தென் மாவட்டங்களின் வெற்றிக்கு படிக்கலாக அமையும். நமது முதலமைச்சர் அவர்கள் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்று தேர்தல் பணிகளை முடுக்கி விட்டுள்ளார். அப்படி 200க்கும் மேற்பட்ட தொகுதிகளை இலக்காக வைக்கிற போது அதில் பங்களிப்பை செலுத்தக்கூடிய மாவட்டங்கள் என நாம் எடுத்துக் கொண்டால் வருவாய் மாவட்டத்தின் அடிப்படையில் எடுத்துக் கொண்டாலும் கூட மதுரை மாவட்டத்தில் தேனி திண்டுக்கல் பிரிக்கப் பட்டாலும் கூட 10 சட்டமன்ற தொகுதிகள் நிறைந்த மதுரை மாவட்டத்தில் வரக்கூடிய வெற்றி தான் தமிழ்நாடு முதல்வர் நமக்கு அளித்து இருக்கக்கூடிய பணிக்கு சான்றாக அமையும்.

**மிகச்சிறப்பான பொதுக்குழு!**

இந்த பணிகளை தற்போது இருந்தே தொடங்க வேண்டும் அதற்கான அறிவிப்புகள் தலைமை கழகத்தில் இருந்து வந்திருக்கிறது. தற்போது மிக ஆர்வத்தோடு கவனிக்க வேண்டிய சூழ்நிலை. நம்முடைய முதல்வர் அனைத்து இடங்களிலும் சென்று ஆதரவை திரட்டி வருகிறார். நாம் ஆளுங்கட்சியாக இருப்பதினால் அரசு பணியும் கட்சி பணியும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் அதில் கட்சிப் பணி முதலாவதாக இருக்க வேண்டும். கட்சிப் பணிகள் முதல் கட்டத்திற்கு வர வேண்டும் என்று சொன்னால் நீங்கள் இன்றிலிருந்து அந்த பணிகளை தொடங்க வேண்டும். இந்த தருணத்தில் தான் வரலாற்று சிறப்பு மிக்க பொதுக்குழுவை மாநில மாநாடு போன்று மதுரையில் கூட்டி இருக்கிறார் நமது முதலமைச்சர் அவர்கள், மற்ற மாநிலங்களில் இருந்து கூட நிர்வாகிகள் முழுமையாக பங்கேற்கும் அளவிற்கு அந்த பொதுக் குழு மிகச் சிறப்பான அளவில் நடைபெற உள்ளது.

**தென்பாண்டி மண்டலத்தின் தலைமையகம்!**

தென்பாண்டி மண்டலத்தின் தலைமையகமாக இருக்கக்கூடிய மதுரையில் நடத்துவதற்கு நமக்கு முதலமைச்சர் வாய்ப்பை தந்திருக்கிறார். திடலை நான் பார்க்கின்ற போது அது பொதுக்குழு நடக்கின்ற திடலை போன்று அல்லாமல் ஒரு மிகப்பெரிய மாநாட்டு திடல் போல பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தில் பத்துக்கு பத்து பெறக்கூடிய வெற்றி தான் அதற்கு திசை காட்டியாக இருக்கும். இங்கே அறிமுக உரையாக ஆற்றியுள்ள எனக்கு மதுரைக்கு அறிமுகம் தேவை இல்லை. இங்க இருக்கக்கூடிய அனைத்து நிர்வாகிகளுடன் நெருங்கி பழகியவன் என்ற முறையில் உங்களோடு இணைந்து பணியாற்றுவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. நாம் பத்து தொகுதிகளையும் வென்றெடுப்போம் என்ற முக்கியத்துவத்தோடு மட்டுமல்லாமல் அதனை அமைப்பு ரீதியாக வென்றெடுக்க வேண்டும். தேர்தல் களம் சூடு பிடிக்க தொடங்கியிருக்கிறது. அரசியல் கட்சிகள் பல்வேறு வியூகங்களை வகுக்க தொடங்கி இருக்கிறார்கள். நம்மை பொருத்த வரை மாவட்ட கழகச் செயலாளர்களுடன் இணைந்து தொகுதியில் நிலவரம் குறித்து விசாரித்து அறிக்கையினை இந்த மாத இறுதிக்குள் சமர்ப்பிப்போம் என்றார்.

இக்கூட்டத்திற்கு மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராம லிங்கம், தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, வடக்கு மாவட்ட துணை செயலாளர் ஆ. வெங்கடேசன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் இக்கூட்டத்தில் பத்து சட்டமன்ற தொகுதிக்கான தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.

# தமிழகத்தில் கொரோனா பாதிப்பில் இருந்து 14 பேர் மீண்டனர்!

## பொதுமக்கள் அச்சம் கொள்ள வேண்டாம்: சுகாதாரத்துறை தகவல்!

சென்னை, மே.20–

தமிழகத்தில் கொரோனாவால் 18 பேர் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில் 14 பேர் குணமடைந்துள் ளனர். பொதுமக்கள் இதுகுறித்து அச்சம் கொள்ள வேண்டாம் என சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

முதல் அலை, இரண்டாம் அலை என அடுத்தடுத்து இந்தியாவில் கொரோனா பாதிப்பு பரவியது. லட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர். கோடிக்கணக்கானோர் தொற்றால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதனை தொடர்ந்து தடுப்பூசிகள் கண்டறியப்பட்டு, 2 டோஸ்கள் செலுத்தப்பட்டன. இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா கட்டுக்குள் இருந்தது.

இந்த நிலையில், தற்போது ஆசியாவில் கொரோனா தொற்று பரவி வருகிறது. இதில், சீனா, தாய்லாந்து, ஹாங்காங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பெருந்தொற்று அதிகரித்து வருகிறது. தமிழ்நாட்டில் கொரோனா பரவல் கட்டுக்குள் இருப்பதாகவும் தொடர்ந்து பரிசோதனை செய்து வருவதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. மேலும் வீரியம் இல்லாத கொரோனா என்பதால் பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என அறிவுறுத்தியுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பசும்பொன் தா. கிருட்டிணன்
### மே 20 (2003)



**கல்லூரியில் பயிலும் போதே மாணவர் தி.மு.க.வில் தீவிரமாகப் பணியாற்றி அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**மாவட்டக் கழகச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற பெருந்தலைவராகவும், மாநிலங்களவை உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**1996ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.